# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2169/3 - 2020 අප්‍රේල් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.04.02

*2169/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்***

*22 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் மூலம், நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இக்கட்டளை மூலம்,*

i. *2017.11.17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியில் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் பின்வருவன நீங்லாக இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள் நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதனை இடைநிறுத்துகின்றேன்:*

(அ) *வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள், அல்லது*

(ஆ) *அந்நாட்டில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முதலீடுகள்*

*ஆயினும், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவு செய்தலுடன் திருப்தியடைதல் வேண்டும்;*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ii. இலங்கையில் வதிகின்ற ஆட்கள் மூலம் வைத்திருக்கப்படும் வர்த்தக வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான பணவனுப்பல்கள் தவிர எவையேனும் வெளிமுக பணவனுப்பல்களை இடைநிறுத்துகின்றேன்;

iii. 2017.11.17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியில் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் புலம்பெயர் கொடுப்பனவை ஏற்கனவே கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்கள் மூலம் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் ரூபாய்க் கணக்குகள் ஊடாக புலம்பெயர் கொடுப்பனவுகளின் கீழ் நிதியங்களை சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதனை இடைநிறுத்துகின்றேன்;

iv. முதல் தடவையாக புலம்பெயர் கொடுப்பனவைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் கொடுப்பனவினை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 வரை மட்டுப்படுத்துகின்றேன்;

v. நாணயச் சபையானது 2017.11.17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியில் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற விடயத்திற்கு விடயம் அடிப்படையிலான முதலீடுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 (10)ஆம் பிரிவுகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் ஆயினும்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதற்கானதாகவிருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது அந்நாட்டில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாகவிருத்தல் வேண்டும்.

இக்கட்டளையானது 2020 ஏப்பிறல் 02 தொடக்கம் மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியானதாகவிருக்கும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2020, ஏப்பிறல் 02.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.